| | |
|---|---|
| அனுப்புநர் | பெறுநர் |
| திரு.சா.சேதுராம வர்மா<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | செய்தி ஆசிரியர்,<br>அனைத்து செய்தி ஊடகங்கள். |

ந.க.எண். 101888 /டி(3) /2022 நாள் : 06.10.2022

ஐயா/அம்மையீர்,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – தமிழ்மொழி இலக்கியத் திறனறித் தேர்வு, அக்டோபர் 2022 – தேர்வுக்கூட நுழைவுச்சீட்டு பதிவிறக்கம் – செய்திக்குறிப்பு வெளியிடக் கோருதல் – சார்பு.

------

15.10.2022 அன்று நடைபெறும் தமிழ்மொழி இலக்கியத் திறனறித் தேர்விற்கு விண்ணப்பித்துள்ள தேர்வர்களுக்கான தேர்வுக்கூட நுழைவுச்சீட்டுகளை சம்பந்தப்பட்ட பள்ளியின் முதல்வர் / தலைமையாசிரியர்கள் www.dge.tn.gov.in என்ற இணையதளம் மூலம் **07.10.2022 பிற்பகல்** முதல் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். இதுகுறித்தான செய்திக்குறிப்பு இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. இதனை தேர்வர்கள் மற்றும் பொதுமக்கள் அறியும் வகையில் தங்கள் பத்திரிகையில் செய்தியாக வெளியிடுமாறும் வானொலி / தொலைக்காட்சியில் ஒலி / ஒளி பரப்பிடுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

**“இது விளம்பரம் அல்ல”** எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒம்/–
இயக்குநர்

**இணைப்பு:** செய்திக்குறிப்பு

## அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006
## தமிழ்மொழி இலக்கியத் திறனறித் தேர்வு, அக்டோபர் 2022

### செய்திக் குறிப்பு

தமிழ்மொழி இலக்கியத் திறனறித் தேர்வு, **15.10.2022 (சனிக்கிழமை)** அன்று நடைபெறவுள்ளது. இத்தேர்விற்கு விண்ணப்பித்துள்ள தேர்வர்களுக்கான தேர்வுக்கூட நுழைவுச்சீட்டுகளை சம்பந்தப்பட்டப் பள்ளி தலைமையாசிரியர்கள்/ முதல்வர்கள் **www.dge.tn.gov.in** என்ற இணையதளம் வாயிலாக **07.10.2022** பிற்பகல் முதல் பள்ளிகளுக்கான User ID, Password-ஐப் பயன்படுத்தி பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். தேர்வர்கள் தேர்வுக்கூட நுழைவுச்சீட்டினைத் தாங்கள் பயிலும் பள்ளியில் பெற்றுக் கொள்ளலாம்.

ஒம்/–
இயக்குநர்

இடம் : சென்னை – 600 006
நாள்: 06.10.2022